1972 மார்ச் 14]

கண் மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம்

***481 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கண் மருத்துவ மனைக்குப் புதிய கட்டடம் கட்டப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதற்கான செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னை அரசினர் கண் மருத்துவ மனைக்கு கீழ்க்கண்ட கட்டடங்கள் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.

1. பரிசோதனைக் கூடத்துடன் கூடிய புற நோயாளி பிரிவு ரூ. 14.00 லட்சம்.

2. அறுவை சிகிச்சை அரங்குடன் கூடிய 200 படுக்கைகள் கொண்ட ஒரு மாடி (100 படுக்கை கொண்ட பொதுப்பகுதியும், 100 படுக்கைகள் கொண்ட சிறப்புப்பகுதியும் ரூ. 8.75 லட்சம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சித்த மருத்துவ மனை ஆசியா விலேயே சிறந்த கண் மருத்துவ மனைகளில் ஒன்றாகக் கருதப்படுவதாலும், இந்தியாவின் பல பாகத்திலிருந்து சிகிச்சைக்கு வர வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுவதாலும்; மத்திய அரசின் சிறப்பு மானியம் அதற்கு வழங்கப்பட் டிருக்கிறதா ? ஐ.நா. நிறுவனத்தின் உதவி கிடைத்து இருக்கிறதா ? அத்தகைய உதவி கேட்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கண் மருத்துவ மனையா ? சித்த மருத்துவ மனையா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, இது கண் மருத்துவ மனையைப் பற்றிய கேள்வி. சித்த மருத்துவ மனைக்கு வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திருப்பூர் நகரில் ஊட்டச் சத்துணவு

***482. வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் ஊட்டச் சத்துணவுத் திட்டம் எந்த தேதியில் இருந்து அமுலுக்கு வருகிறது ?

(இ) அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) சிறப்புச் சத்துணவுத் திட்டம், 27—7—1971 லிருந்து திருப்பூரில் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS